ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

க்ருஷ்ணா! குருவாயூரப்பா!



ஸ்வாமி பூந்தானம் அருளிச்செய்த

# ஞானப்பான

(மூலமும் பொருளும்)

# ജ്ഞാനപ്പാന

ശ്രീപൂന്താനം


நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

எழுத்து, மொழி பெயர்ப்பில் உதவியவர்கள்: செல்வி. அம்ருதா மற்றும் செல்வி. சித்ரா

(கோழிக்கோடு)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

க்ருஷ்ணா! குருவாயூரப்பா!

ഹരേ കൃഷ്ണാ! ഗുരുവായൂരപ്പാ! നാരായണാ! നാരായണാ! നാരായണാ!

കൃഷ്ണ കൃഷ്ണാ മുകുന്ദാ ജനാർദനാ
കൃഷ്ണ ഗോവിന്ദ നാരായണാ ഹരേ
അച്യുതാനന്ദ ഗോവിന്ദ മാധവാ
സച്ചിദാനന്ദ നാരായണാ ഹരേ

ஸ்ரீபூந்தானம் அருளிச்செய்த ஞானப்பானா

க்ருஷ்ண க்ருஷ்ணா முகுந்த ஜநார்த்தனா
க்ருஷ்ண கோவிந்த நாராயணா ஹரே
அச்யுதானந்த கோவிந்த மாதவா
ஸச்சிதானந்த நாராயணா ஹரே

## மங்களாசரணம்

குருநாதன் துண செய்க சந்ததம் திருநாமங்ஙள் நாவின்மேல் எப்பொழும்
பிரியாதே இரிக்கணம் நம்முடெ நர ஜன்மம் ஸஃபலமாக்கீடுவான்

**பொருள் –** என்னுடைய ஆசார்யன் (ஸ்ரீகுருவாயூரப்பன்) எனக்கு எப்போதும் உதவட்டும். அதன் காரணமாக ஸ்ரீகுருவாயூரப்பனின் திருநாமங்கள் என்னுடைய நாக்கில் எப்போதும் இருக்கவேண்டும். இதனால், என்னுடைய இந்த மனிதப்பிறவி பயனுள்ளதாகிவிடும்.

**விளக்கம் -** ஆசார்ய வந்தனத்துடன் தொடங்குகிறார். ஆத்மஞானம் குறித்த விஷயத்தில் ஆசார்யனின் பணியே மிகவும் முக்கியமானது. ஸ்வாமி பூந்தானத்தைப் பொறுத்தவரை ஈச்வரனும், குருவும் ஒருவரே ஆவர். ஆசார்யனின் உபதேசங்கள் அனைத்தும் உண்மையானவை என்று ஏற்கப்பட்டவேண்டும். ஆசார்யன் மீதும், ஸர்வேச்வரன் மீதும்

கொள்ளும் மஹாவிச்வாசம் என்பதே ச்ரத்தை எனப்படும். இந்த ச்ரத்தை மட்டுமே நமக்கு ஸர்வேச்வரனின் மாஹாத்ம்யத்தை உணர்த்தக் கூடியதாகும். கீதையில் (4-39) - ச்ரத்தாவாந் லபதே ஞானம் - ச்ரத்தை கொண்டவன் ஞானம் பெறுகிறான் - என்றது காண்க. ச்ரத்தையுடன் ஆத்மஞானம் சேரும்போது ஒருவனுக்குப் புருஷார்த்தம் கிட்டுகிறது. ஆத்மஞானம் உண்டாக்கவல்ல இந்த நூலின் தொடக்கத்தில், குருவைப் போற்றுகிறார்.

## காலத்தின் லீலைகள்

இன்னலேயோளமெந்தன்னறிஞ்ஞீலா இனி நாளேயுமெந்தன்னறிஞ்ஞீலா
இன்னீக் கண்ட தடிக்கு விநாசவு மின்ன நேரமென்னேது அறிஞ்ஞீலா

பொருள் – நமக்கு நேற்றுவரை என்ன நிகழ்ந்தது என்று நாம் அறியமாட்டோம். நாளை என்ன நடக்கும் என்றும் நாம் அறியமாட்டோம். இப்போது நமது கண்களுக்குப் புலப்படும் இந்தச் சரீரம் அழிகின்ற நேரம் எது என்றும் நாம் அறியமாட்டோம்.

விளக்கம் - மனிதன் தனது வாழ்வைக் குறித்து ஏதும் அறியாமல் அல்லவோ இங்கு வந்து பிறந்துள்ளான்? பிறப்பதற்கு முன்பு தான் யார் என்பதை அவன் அறியமாட்டான். இறந்த பின்னர் எவ்விதம் ஆவான் என்பதையும் அவன் அறியமாட்டான். மேலும் வாழும் காலத்திலும் அவனது செயல்கள் இவ்விதம்தான் நடக்கும் என்பதிலும் உறுதி எதும் இல்லை. இது நாள்வரை அவன் விரும்பாத பலவும் அவனுக்கு நடந்திருக்கலாம், இனியும் நடக்கலாம். அவை ஏன் நடக்கின்றன? நமக்குத் தெரியாது. தான் விரும்பிய பலவும் நடக்காமலும் போயிருக்கலாம். ஏன்? அதுவும் நமக்குத் தெரியாது. இறந்த காலம் குறித்து இப்படி உள்ளபோது, எதிர்காலம் எவ்விதம் இருக்கும் என்பது நிச்சயமாகத் தெளிவாக இருக்காது. அறியாமை மற்றும் நிச்சயமற்ற தன்மை ஆகிய இரண்டும் நமது வாழ்வில் எப்போதும் பின்னிப் பிணைந்து இருந்தாலும், அவை மறைந்தே உள்ளன. அனைத்து ஸுகங்களுக்கும், துக்கங்களுக்கும் ஆதாரமாக உள்ள இந்தச் சரீரத்தில்தான் எத்தனை மாறுபாடுகள்? எந்த நேரத்தில் இந்தச் சரீரம் மண்ணிற்குள் செல்லும் என்று யாரும் அறியமாட்டனர். பிறப்பு, இறப்பு, வயோதிகம், நோய், துக்கம் போன்றுள்ள தோஷங்கள் இந்த மாமிச சரீரத்தை எப்போதும் பீடித்தபடியே உள்ளன. இவை அனைத்தையும்

ஒருவன் சிந்திக்கத் தொடங்கினால் நன்று. இவற்றை அறிந்தால் - இந்த லோகமானது அநித்யம், துன்பங்களின் இருப்பிடம் என்று உணரலாம்.

கண்டுகண்டங்ஙிரிக்கும் ஜனங்ஙளெ கண்டில்லென்னு வருத்துன்னதும் பவான்
ரண்டு நாலு தினம் கொண்டொருத்தனெ தண்டிலேட்டி (ற்றி) நடத்துன்னதும் பவான்
மாளிக முகளேறிய மன்னன்டெ தோளில் மாறாப்பு கேட்டு (ற்று) ன்னதும் பவான்

**பொருள்** – இன்று நாம் காணும் மனிதர்களைச் சட்டென்று காணாமல் போகச்செய்வது (மரணம் அடைதல்) பகவானின் செயலாகும். ஆரோக்யமான ஒருவன் இரண்டு அல்லது நான்கு நாட்களில் சிதையில் எரியும்படிச் செய்வது பகவானின் செயலாகும். அரண்மனையில் உள்ள அரசனை ஆண்டியாக மாற்றி, தோளில் கிழிந்த ஆடைகளை அணிந்து பிச்சை எடுக்கும் அவலத்திற்கு ஆக்குவதும் பகவானின் செயலாகும்.

**விளக்கம்** - நாம் காணும் ஒருவர் திடீரெனக் காணாமல் போகக்கூடும்; இவ்விதம் செய்வது ஈச்வரனே ஆவான். கண்கள் திறந்திருக்கும்போதே மரணம் அடைவது என்பது ஸர்வேச்வரனின் லீலைகள் ஆகும். துக்கத்திலும், தரித்திரத்திலும் சிக்கித் தவித்தபடி உள்ள ஒருவர் ஏதோ ஒரு சூழ்நிலை காரணமாக அரசபதவியை அடையக்கூடும். அதே போன்று அரசபதவிகளில் இருந்த ஒருவன், பிச்சைப்பாத்திரம் எடுத்தபடி தெருவில் திரிவதையும் காணலாம். இவை இரண்டும் ஸர்வேச்வரனின் லீலைகள் அல்லாமல் வேறு என்ன?

## அதிகாரபேதம்

கண்டாலொட்டறியுன்னு சிலரிது கண்டாலும் திரியா சிலர்க்கேதுமே
கண்டதொன்னுமே ஸத்யமல்லென்னது மும்பே கண்டிட்டறியுன்னிது சிலர்
மனு ஜாதியில் தன்னெ பலவிதம் மனஸ்ஸினு விசேஷமுண்டோர்க்கணம்

**பொருள்** – மேலே கூறப்பட்ட உண்மையை ஒரு சிலர் உணர்ந்து தெளிகிறார்கள். ஆனால் ஒரு சிலர் இதனை அன்றாடம் கண்டாலும், தெளிவடைவதில்லை. ஒரு சிலர் தாங்கள் காண்பது அனைத்தும் உண்மையானது அல்ல என்று முடிவு செய்கிறார்கள் – இது ஏன்? காரணம், மனிதர்களில் பலவிதமான மனோபாவங்கள் கொண்டவர்கள் உள்ளனர். இதனால்தான் இப்படியாக ஒவ்வொருவரும் பலவிதங்களில் உள்ளனர் என்று நினைவில் கொள்ளவேண்டும்.

**விளக்கம்** – மேலே கூறியபடி வாழ்க்கையானது நிரந்தரமானது அல்ல என்பதை அறியவேண்டும். இது வைராக்யம் அல்லது பற்றுதலின்மை என்பதால் மட்டுமே இயலும். ஆனால் அனைத்து மனிதர்களுக்கும் வைராக்யம் ஏற்படாமல் உள்ளதற்குக் காரணம் என்ன? இதன் காரணம் அவர்கள், ஸர்வேச்வரனின் மாயை காரணமாக அறியாமை என்னும் மயக்கத்தில் மூழ்கடிக்கப்படுகிறார்கள். ஆனால் ஒரு சிலர் மட்டும் ஆழ்ந்த தியானம் மற்றும் ஸர்வேச்வரன் மீது கொண்ட விச்வாசம் ஆகியவை மூலமாக இந்த மாயை உண்டாக்கும் மயக்கத்தை உணர்கிறார்கள். இந்த வாழ்க்கை என்பது அற்பமான காலம் மட்டுமே இருக்கக்கூடியது, துக்கம் நிறைந்தது போன்ற உண்மைகளை அவர்கள் அறிகிறார்கள். ஒரு சிலர் மீண்டும் மீண்டும் இந்த உண்மைகளைக் கண்டு அனுபவித்த பின்னரும், இந்த வாழ்க்கையின் நிலையற்ற தன்மை குறித்து தெளிவாக அறிவதில்லை. ஒரு சிலர் கண்களால் கண்டாலும், காதால் கேட்டாலும், மனதால் அறிந்தாலும் இந்த உண்மைகளை உண்மை என்று உணர மறுக்கிறார்கள். இது ஏன்? காரணம், மனிதர்களின் மனம் பலவிதமாக உள்ளது; அவரவர்களின் மனதைக் குறித்தே அவர்களுடைய ஸ்வபாவங்கள் உள்ளன; அதனைப் பொறுத்தே அவரவர்களின் அறியும் திறன் மற்றும் அறிய இயலாத தன்மை உள்ளது.

பலர்க்குமறியேணமென்னிட்டல்லோ பலஜாதி பறயுன்னு சாஸ்த்ரங்ஙள்
கர்மத்திலதிகாரி ஜனங்ஙள்க்கு கர்ம சாஸ்த்ரங்ஙளுண்டு பலவிதம்
கர்மசாஸ்த்ரங்ஙள் யோகங்ஙளென்னிவ ஸங்க்யயில்லது நில்கட்டெ ஸர்வவும்
[ஞானத்தின் அதிகாரி ஜனங்ஙள்க்கு ஞான சாஸ்த்ரங்களும் பலதுண்டல்லோ
ஸாங்க்ய சாஸ்த்ரங்ஙள் யோகங்ஙள் என்னிவ ஸங்க்யயில்லது நில்கட்டெ ஸர்வவும்]

**பொருள்** – இப்படியாக உள்ள பலவிதமான மனிதர்கள் அறியவேண்டும் என்பதற்காகவே சாஸ்த்ரங்கள் பலவிதமான வழிகளில் நல்லவற்றை உபதேசிக்கின்றன. கர்மம் செய்வதில் மட்டுமே நோக்கம் உள்ளவர்களுக்காக கர்மசாஸ்த்ரங்கள் பல உள்ளன. கர்மசாஸ்த்ரங்கள், யோகசாஸ்த்ரங்கள் என்று பலவிதமான சாஸ்த்ரங்கள் எண்ணற்றவை உண்டு. இவை அனைத்தையும் நாம் சற்று தள்ளி வைப்போம்.

**விளக்கம்** - மனிதர்களுடைய தகுதிக்கும் அறிவுக்கும் ஏற்ப மட்டுமே உபதேசிக்க வேண்டும் என்பதால்தான், சாஸ்த்ரங்கள் பலவிதமாகவும் பலதாகவும் உள்ளன.

மனிதர்களில் ஒரு சிலர் எப்போதும் கர்மங்களை இயற்றியபடி இருக்கவேண்டும் என்று விரும்புவர்; இவர்களுக்காகக் கர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளன. வேதங்களின் முற்பகுதி கர்மகாண்டம் (அல்லது பூர்வமீமாம்ஸை) என்றும், பிற்பகுதி ஞானகாண்டம் (அல்லது உத்தரமீமாம்ஸை, வேதாந்தம்) என்றும் கூறப்படும். ஆத்மஞானத்தில் நிலைநின்று, மோக்ஷ மார்க்கத்தில் செல்ல விழைபவர்களுக்குப் பலவிதமாக உள்ள உபநிஷத்துக்கள் அனைத்தும் ஞானகாண்டம் ஆகும். ஸ்ரீமத்பாகவதம் (11-20-6) – யோகஸ்த்ரயோ மயா ப்ரோக்தா ந்ருணாம் ச்ரேயோவிதித்ஸயா; ஞானம் கர்ம ச பக்திச்ச நோபயோ அந்யோஸ்தித குத்ரசித் – மனிதர்களுக்கு ச்ரேயஸ் (மோக்ஷம்) உண்டாகவேண்டும் என்ற எண்ணம் காரணமாக ஞானம், கர்மம் மற்றும் பக்தி என்பதான மூன்று மார்க்கங்கள் என்னால் உண்டாக்கப்பட்டன – என்றது காண்க. ஸ்ரீமந்நாராயணீயத்தில் (96-4) – ஞானம் கர்மாபி பக்தி: த்ரிதயம் இஹ பவத் ப்ராபகம் – இந்த உலகில் ஞானம், கர்மம் மற்றும் பக்தி ஆகிய மூன்றும் பகவானாகிய உன்னை அடைவிக்கும் – என்றது காண்க.

## தத்வவிசாரம்

சுழன்னீடுன்ன ஸம்ஸார சக்ரத்திலு ழன்னீடும் நமுக்கறிஞ்ஞீடுவான்
அறிவுள்ள மஹத்துக்களுண்டொரு பரமார்த்தமருள் செய்திரிக்குன்னு
எளுதாயிட்டு முக்தி லபிக்குவான் செவி தன்னிது கேள்பினெல்லாவரும்

பொருள் – ஜனனம், மரணம் என்பதான வடிவில் சுழன்றபடி உள்ளதே ஸம்ஸார சக்கரமாகும். நாம் அனைவரும் இதில் மூழ்கியும், மேலே எழும்பியபடியும் உள்ளோம். இதில் உள்ள துன்பத்தை நமக்கு உணர்த்தும்விதமாக, துன்பத்தில் சூழ்ந்த நம்மைக் கரையேற்றும் பொருட்டு, ஸத்யத்தை உணர்ந்துள்ள மஹான்கள் ஒரு உயர்ந்த வழியை உபதேசித்து வைத்துள்ளனர். முக்தியில் விருப்பம் உள்ள அனைவரும் தங்களுடைய செவி கொண்டு அவர்கள் உபதேசித்ததைக் கேட்பீர்களாக.

நம்மெயொக்கெயும் பந்திச்ச சாதனம் கர்மமென்னறியேண்டது முன்பினால்
முன்னமிக்கண்ட விச்வமசேஷவும் ஒன்னாயுள்ளொரு ஜ்யோதி ஸ்வரூபமாய்
ஒன்னும் சென்னங்ஙு தன்னோடு பற்றாதெ ஒன்னிலும் சென்னு தானும் வலயாதெ
ஒன்னொன்னாயி நினய்க்கும் ஜனங்ஙள்க்கு ஒன்னு கொண்டறிவாகுன்ன வஸ்துவாய்
ஒன்னிலுமறியாத்த ஜனங்ஙள்க்கு ஒன்னு கொண்டும் திரியாத்த வஸ்துவாய்
ஒன்னுபோலெ யொன்னில்லாதெ யுள்ளதி னொன்னா யுள்ளோரு ஜீவ ஸ்வரூபமாய்

ஒன்னிலுமொரு பந்தமில்லாதெயாய் நின்னவன் தன்னெ விச்வம் சமச்சு போல்
மூன்னு மொன்னிலடங்ஙுன்னு பின்னெயும் ஒன்னுமில்லபோல் விச்வமன்னேரத்து

**பொருள்** – நம் அனைவரையும் ஒரே போன்று இந்த உலகத்தில் பந்தப்படுத்துவதும், ஸம்ஸாரத்தில் நிலை நிறுத்துவதும் நம்முடைய கர்மங்களே ஆகும் என்பதை முதலில் அறியவேண்டும். ப்ரளய காலத்தில் நாம் காணும் இந்த உலகம் முழுவதும், ஒப்பில்லாத பரஞ்ஜோதியிடம் சென்று ஒடுங்குகின்றன. அந்த ஜ்யோதி ஸ்வரூபமானது தன்னிடம் லயிக்கும் எதனிடமும் ஒட்டுவதில்லை, தன்னிடம் அவை எதுவும் வந்து ஒட்டவும் விடுவதில்லை; லயித்தாலும், தாமரை இலை மீது உள்ள தண்ணீர் போன்று மட்டுமே உண்டு. அந்த வஸ்துவை அறிய முனையும் பக்தர்கள், "இந்த வஸ்து இப்படிப்பட்டது, இந்த வஸ்து இப்படிப்பட்டது அல்ல" என்று மட்டுமே அறிய முற்படுகிறார்கள்; ஆனால் இவ்விதம் அதனை அறிந்தால், மற்ற அனைத்தையும் அறிந்த ஞானத்தை அந்த வஸ்து அளிக்கிறது. ஆனால், அதனை அறிய முற்படாதவர்களுக்கு, மற்ற எதுவும் சரியாகப் புலப்படுவதில்லை. வெளியில் பலவிதமான ரூபங்களுடன் காணப்பட்டாலும், அவை அனைத்திலும் உள்ள ஜீவாத்மாக்களின் அந்தர்யாமியாக அந்த வஸ்துவே உள்ளது. அனைத்தும் தன்னில் உள்ளபோதிலும், அனைத்தின் உள்ளே தான் உள்ளபோதிலும் எதிலும் பந்தப்படாமல் நிற்கும் அந்த வஸ்து, மீண்டும் உலகங்களைப் படைக்கிறது. அப்போது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்றுள்ள குணங்கள்; இவற்றின் விளைவாக உள்ள புண்யகர்மம், பாவகர்மம், இரண்டும் கலந்த கர்மம் என்றுள்ள கர்மங்கள் போன்று மூன்றாக உள்ள பலவும் உண்டாகின்றன. பின்னர் மீண்டும் ப்ரளயம் உண்டாகும்போது, மூன்றாக உள்ள இவை அனைத்தும் அதே வஸ்துவில் சென்று லயிக்கின்றன. அப்போது இந்த விச்வத்தில் அந்த வஸ்துவைத் தவிர வேறு ஏதும் இல்லை என்றாகிறது.

**விளக்கம்** - கர்மம் என்பதான பந்தம், கர்மத்திலிருந்து விடுதலை என்பதான மோக்ஷம் ஆகியவை குறித்து ஸத்யத்தைப் பற்றி நன்கு உணர்ந்தவன் அறிந்திருக்கவேண்டும். இந்த உலகம் கர்மங்களால் பந்தபடுகிறது என்பதைக் கீதையில் (3-9) - லோகோயம் கர்மபந்தந: – என்று கூறியது காண்க. இந்தக் கர்மங்கள் நம்மை பந்தத்தில் ஆழ்த்துவதோடு நிற்காமல், அதன் விளைவாக ஸம்ஸார சக்கரத்தில் ஈடுபடுத்தி, மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்பு என்பதில் சிக்க வைக்கும். ஆனால், ஸ்ருஷ்டி உண்டாகி கர்மகதி தொடங்குவதற்கு முன்பும், கர்மகதி நடக்கும்போதும், ப்ரளயம் உண்டாகி கர்மகதி முடிந்த பின்னரும்

எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் நிலையாக உள்ள ஸத்யவஸ்துவாக அந்தப் பரமாத்மா உள்ளான். அந்த வஸ்து தானாகவே வலியச் சென்று, கர்மபந்தங்களின் மூலம் உண்டாகும் கர்மங்கள் அல்லது வஸ்துக்கள் ஆகியவற்றுடன் சேரும்போதிலும், எந்தவிதமான தோஷம் அடையாமல் இருக்கிறது. இந்த உண்மையை அறிந்தவர்கள், இந்த லோகத்தில் உள்ள அனைத்திலும் பரமாத்மாவைக் காண்கிறார்கள். இதனைக் கீதையில் (6-30) – யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பச்யதி – யார் ஒருவன் அனைத்து சராசரங்களிலும், அனைவருக்கும் ஆத்மாவாக உள்ள வாஸுதேவனாகிய நானே வ்யாபித்துள்ளேன் என்று பார்க்கிறானோ – என்றது காண்க. இப்படிப்பட்டவர்கள் கீதை (7-19) – வாஸுதேவ: ஸர்வம் – அனைத்தும் வாஸுதேவனே – என்று உணர்கிறார்கள். வேறு சிலர், இந்த ப்ரபஞ்சத்தில் உள்ள பலவற்றிலும், வெவ்வேறு நாம ரூபங்களுடன் கூடியதாக பரமாத்மாவைக் காண்கிறார்கள். இவர்களுக்குப் பரமாத்மாவைக் குறித்த உண்மை சரிவர உண்டாவதில்லை. அதனால், இவர்கள் எப்போதும் கர்மங்களின் ஈடுபட்டு ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளார்கள். ஸர்வேச்வரன் ப்ரபஞ்சத்தைப் படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என்றுள்ள மூன்று கர்மங்களைச் செய்யும்விதமாக ரஜஸ், ஸத்வம், தமஸ் என்ற மூன்று குணங்களைக் கொண்டவனாக மூவரின் அந்தர்யாமியாக நின்றான். பரமாத்மா ரஜோகுணம் கொண்டு உலகைப் படைக்கும்போது நான்முகன் என்றும், ஸத்வகுணம் எடுத்து ரக்ஷிக்கும்போது விஷ்ணு என்றும், தமோகுணம் எடுத்து ஸம்ஹரிக்கும்போது சிவன் என்றும் அவரவர்களின் அந்தர்யாமியாக நிற்கிறான். பரமாத்மா இந்த மூன்று குணங்களைக் கொண்டு கர்மங்களை இயற்றுவதாகத் தோன்றும்போதிலும், அவனிடம் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுவதில்லை. படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என்பதான கர்மங்களை அவன் செய்தபோதிலும், அவற்றின் பலனோ அல்லது தோஷங்களோ அவனை நெருங்குவதில்லை.

## கர்மம்

ஒன்னு கொண்டு சமச்சொரு விச்வத்தில் மூன்னாயிட்டுள்ள கர்மங்களொக்கெயும்
புண்ய கர்மங்ஙள் பாப கர்மங்ஙளும் புண்ய பாபங்ஙள் மிச்ரமாம் கர்மவும்
மூன்னு ஜாதி நிரூபிச்சு காணும்போள் மூன்னு கொண்டும் தளய்க்குன்னு ஜீவனெ
பொன்னின் சங்ஙலயொன்னி பறஞ்ஞதி லொன்னிரும்பு கொண்டன்னத்ரே பேதங்ஙள்
ரண்டினாலுமெடுத்து பணி செய்த சங்ஙலயல்லோ மிஸ்ரமாம் கர்மவும்

ப்ரம்மா வாதியாயீச்சயெரும்போளம் கர்மபந்தன்மா ரென்ன தறிஞ்ஞாலும்

**பொருள்** – இப்படியாகப் படைக்கப்பட்ட இந்த உலகத்தில், நம்முடைய அறியாமை என்ற ஒன்றின் காரணமாக நமக்குக் கர்மங்கள் உண்டாகின்றன. இப்படிப்பட்ட கர்மங்கள் மூன்று வகைப்படும். அவையாவன – புண்ய கர்மங்கள், பாவ கர்மங்கள் மற்றும் மிச்ர கர்மங்கள் ஆகும். இப்படியாக உள்ள மூன்று கர்மங்களின் உண்மையை நாம் உணரும்போது, இவை மூன்றால் ஜீவன் பந்தப்பட்டுள்ளது என்பதை நாம் உணரமுடியும். எந்தவிதமான கர்மமாக இருந்தாலும் அவை நம்மைப் பந்தப்படுத்தும் சங்கிலிகளே ஆகும். புண்ணியம் என்பது தங்கச்சங்கிலி என்றால், பாவம் என்பது இரும்பிச்சங்கிலி ஆகிறது. மிச்ரம் என்பது இந்த இரண்டும் கலந்த சங்கிலி ஆகிறது. நான்முகன் தொடக்கமாக ஈ, எறும்பு முடிய உள்ள அனைத்துமே கர்மங்களால் பந்தப்படுகின்றன என்பதை அறிக.

**விளக்கம்** – ஸ்ருஷ்டியின்போது ஸத்வ, ரஜோ, தாமஸ குணங்கள் மூலம் மீண்டும் ப்ரபஞ்சத்தின் அனைத்து செயல்களும் தொடங்குகின்றன. இந்தக் குணங்களே அனைத்து கர்மங்களையும் நியமிக்கின்றன. இந்தக் கர்மங்களும் குணங்கள் போன்றே மூன்றாக உள்ளன. அவையாவன - புண்யகர்மம், பாவகர்மம் மற்றும் மிச்ரகர்மம் - ஆகும். ஸத்வ குணம் மூலம் புண்யகர்மமும், தமோ குணத்தால் பாவகர்மமும், ரஜோ குணத்தால் மிச்ர கர்மமும் ஏற்பருகின்றன. எப்படிப்பட்ட கர்மங்களாக இருந்தாலும் அது ஜீவனைப் பந்தப்படுத்துவதற்கான காரணமாக உள்ளன. புண்யகர்மங்கள் தங்கச்சங்கிலி போன்று ஜீவனைப் பிணைக்கிறது என்றால், பாவகர்மங்கள் இரும்புச்சங்கலி போன்று உள்ளன. இது மட்டுமே இங்குள்ள வேறுபாடு ஆகும். இந்த இரண்டுவிதமான சங்கிலிகளும் சேர்ந்து உண்டாக்கப்பட்டதே மிச்ரகர்மம் ஆகும். பந்தப்படுத்துதல் என்னும்போது தங்கச்சங்கிலி, இருப்புச்சங்கிலி என்ற இரண்டுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை அல்லவோ? நான்முகன் தொடங்கமாக உலகில் உள்ள ஈ, எறும்பு முடிய உள்ள அனைத்து உயிர்களும் கர்மங்களால் பந்தப்பட்டுள்ளதை அறியலாம். இவ்விதம் உள்ள மூன்று கர்மங்களாலும் பந்தப்படாமல் இருந்தால் மட்டுமே ஜீவனுக்கு முக்தி ஏற்படுகிறது.

புவனங்ஙளெ ஸ்ருஷ்டிக்கயென்னது புவனாந்த்ய ப்ரளயம் கழிவோளம்
கர்ம பாசத்தெ லங்கிக்கயென்னது ப்ரம்மாவின்னு மெளுதல்ல நிர்ணயம்
திக்பாலன்மாரு மவ்வண்ணமோரோரு திக்கு தோறும் தளச்சு கிடக்குன்னு
அல்பகர்மிகளாகிய நாமெல்லாம் அல்ப காலம் கொண்டோரோரு ஜந்துக்கள்
கர்ப்ப பாத்ரத்தில் புக்கும் புறப்பெட்டும் கர்மம் கொண்டு களிக்குன்னதிங்ஙனெ

**பொருள்** – ப்ரளயகாலம் வந்து அனைத்தும் பரமாத்மாவிடம் லயிக்கும்வரை இந்த ப்ரபஞ்சத்தில் ஸ்ருஷ்டி என்பது நடந்துகொண்டே உள்ளது. ஆகவே இந்தக் கர்மம் என்னும் கயிற்றினை அறுக்க நான்முகனுக்குக் கூட இயலாது என்று அறியவேண்டும். சாதாரண ஜீவராசிகள் மட்டும் அல்ல, எட்டுத் திசைகளைக் காக்கும் தேவதைகளாலும் இது இயலாத செயலாகும். திசைகளைக் காப்பாற்றுதல் முதலான உயர்ந்த கர்மங்கள் உள்ள தேவர்களுக்கே இத்தகைய நிலை என்னும்போது, அற்பமான கர்மங்களைச் செய்யும் நம் போன்ற மனிதர்களின் நிலை என்ன? எத்தனையோ தேவ வருடங்கள் கழிந்த பின்னரும் அவர்களுடைய கர்மங்கள் கழியவில்லை என்றால், மிகவும் அற்பமான காலம் மட்டுமே உயிருடன் உள்ளபோது நம்மால் எந்த அளவிற்கு கர்மபலன்களைக் கழிக்க இயலும்? ஆகவே நாம் மீண்டும் மீண்டும் கர்ப்பம் என்னும் பாத்திரத்தில் விழுந்து, பிறந்து, இறந்து – இப்படியே செய்து கொண்டுள்ளோம்.

**விளக்கம்** - ஸ்ருஷ்டியும் ப்ரளயமும் இரவு பகல் போன்று ஒன்றன் பின் ஒன்றாக வந்தபடி உள்ளன. இவற்றுக்குத் தொடக்கமும் முடிவும் எப்போதும் கிடையாது. இந்த ஸம்ஸாரத்தில் உள்ளவரை கர்மபாசத்தை அறுப்பதற்கு நான்முகனாலும் இயலாது. “ஸம்ஸாரத்திலிருந்து நான் விடுபடவேண்டும்” என்ற ப்ரதிஜ்ஞை மட்டுமே கர்மங்களிலிருந்து விடுபட வழிவகுக்கும். ஸம்ஸாரத்தில் இழிந்த காரணத்தினால்தான் இந்த்ரன் (கிழக்கு), அக்னி (தென்கிழக்கு), யமன் (தெற்கு), நிருதி (தென்மேற்கு), வருணன் (மேற்கு), வாயு (வடமேற்கு), குபேரன் (வடக்கு), ஈசானன் (வடகிழக்கு) போன்ற எட்டுத்திசைகளின் காப்பாளர்கள், அந்தந்த திசையைக் காக்கவேண்டும் என்ற கர்மத்தில் ஈடுபட்டபடி உள்ளனர். சுயநலம் கொண்ட மனிதர்கள் பலவிதமான பிறவிகள் எடுத்து, ஜனனமரணம் என்ற ப்ரவாஹத்தில் மூழ்கியும் மேலேவந்தும் துக்கப்படுகிறார்கள். மீண்டும் ஜனனம், மீண்டும் மரணம், மீண்டும் கர்ப்பவாஸம் என்று இப்படியாகக் கர்மத்தின் லீலையில் அகப்பட்டுத் துன்பம் அடைகிறார்கள் .

## ஜீவகதி

நரகத்தில் கிடக்குன்ன ஜீவன் போய் துரிதங்ஙளொடுங்ஙி மனஸ்ஸின்டே
பரிபாகவும் வன்னு க்ரமத்தாலே நர ஜாதியில் வன்னு பிறன்னிட்டு
ஸுக்ருதம் செய்து மேல்போட்டு போயவர் ஸுகிச்சீடுன்னு ஸத்யலோகத்தோளம்
ஸத்கர்மம் கொண்டு மேல்போட்டு போயவர் ஸ்வர்க்கத்திங்கலிருன்னு ரமிச்சுடன்
ஸுகிச்சங்ஙனே போயிடும் காலவும் ஸுக்ருதங்ஙளுமொக்கெ யொடுங்ஙிட்டு
பரிபாகவுமெள்ளோளமில்லாதெ பதிச்சீடுன்னு நம்முடெ பூமியில்
துரிதம் செய்து சத்தவர் பின்னெ போய் நரகங்ஙளில் வெவ்வேறெ வீழுன்னு

பொருள் – தாங்கள் செய்த பாவங்களின் பலன்கள் முழுவதும் கழியும்வரை, ஜீவன் நரகத்தில் தனது காலத்தைக் கடத்துகிறான். அதன் பின்னர் அவனுடைய மனம் ஒருவித பக்குவ நிலையை அடைகிறது. அந்த நேரத்தில் அவன் இந்த உலகில் மனிதனாக வந்து பிறக்கிறான். இப்படியாக மனிதனாகப் பிறந்தவர்களில் பல்வேறு புண்ணிய செயல்களைச் செய்தவர்கள் (ஸுக்ருதம்), ஸத்யலோகம் சென்று அங்கு மகிழ்வுடன் எப்போதும் உள்ளனர் (அவர்கள் மீண்டும் பூமிக்குத் திரும்புவதில்லை). ஒரு சிலர் நற்செயல்கள் (ஸத்கர்மம்) பல செய்தபடி இருக்கக்கூடும். அவர்கள் தங்களுடைய கர்மபலன் கழியும்வரை ஸ்வர்க்கத்தில் உள்ளனர். தங்களுடைய புண்ணிய பலன்கள் கழிந்த பின்னர் அவர்கள் ஸ்வர்க்கத்திலிருந்து மீண்டும் இந்தப் பூமிக்குத் திரும்புகிறார்கள். இங்கு உள்ள காலங்களில் எந்தவிதமான பக்குவமும் இல்லாமல் தீயகர்மங்களைச் செய்பவர்கள், ஸ்வர்கத்திற்குச் செல்லாமல் பலவிதமான நரகங்களில் சென்று சேர்கிறார்கள்.

**விளக்கம்** – பலவிதமான பாவங்கள் செய்வதன் பலனாகத் தாழ்வான பிறவிகளில் பிறந்து கொடிய நரகம் அனுபவிக்கும் நிலை உண்டாகும். அதன் காரணமாக உண்டாகும் துன்பங்களை, ஏதாவது விதத்தில் அனுபவித்துக் கழித்த பின்னர் மனம் பக்குவம் அடைகிறது. இப்படியாகச் சில காலம் கழித்து மனம் தூய்மை அடையும்போது, அவர்களுக்கு உண்மையை அறியும் ஆர்வம் உண்டாகிறது. இதனால் அவர்கள் தர்ம மார்க்கத்தில் ஈடுபடுகின்றனர். இதன் விளைவாக, புண்ணியம் செய்யும் அவர்கள், மரணத்தின் பின்னர் தேவயான மார்க்கத்தில் கூடி உயர்ந்து சென்று, ஸத்யலோகத்தை அடைந்து சுகம் பெறுகிறார்கள். அங்கு அவர்கள் ப்ரஹ்மத்துடன் ஒத்த முக்தர்கள்

ஆகிறார்கள். மனித ஜன்மம் கிட்டிய பின்னரும் ஒரு சிலர் ப்ரஹ்மத்தைக் குறித்தும், ஸத்யத்தைக் குறித்தும் உண்மையை அறிந்து கொள்ள முயற்சி செய்வதில்லை. ஒரு சிலர் ப்ரஹ்மத்தைக் குறித்த உண்மை ஏதும் அறியாமல் உள்ளபோதிலும், யாகம் போன்றவற்றில் ஈடுபட்டு ஸ்வர்க்கம் அடைகின்றனர். அப்படிப்பட்டவர்கள் சில காலம் ஸ்வர்க்கத்தில் மகிழ்ச்சியுடன் இருந்து வருவர். அவர்கள் அங்குள்ள சுகத்தில் மூழ்கி, தங்களுடைய காலம் கழிவதை அறிவதில்லை. சுகத்தை அனுபவித்து அனுபவித்து, அவர்கள் செய்த புண்ணியங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும். இப்படியாகப் புண்ணியங்கள் முற்றிலும் கழிந்த பின்னர் அவர்கள் பூமிக்குத் திரும்புகிறார்கள். மனிதர்களாகப் பிறந்த பின்னர் பாவ கர்மங்களின் வாஸனை காரணமாக தாழ்வான செயல்கள் செய்து மீண்டும் நரகம் செல்லக்கூடும். இப்படியாக இவர்கள் ஸ்வர்க்கம், பூமி, நரகம் என்ற சுழற்சியில் உள்ளனர்.

ஸுர லோகத்தில் நின்னொரு ஜீவன் போய் நர லோகே மஹீஸுரனாகுன்னு
சண்ட கர்மங்ஙள் செய்தவன் சாகும்போள் சண்டால குலத்திங்கள் பிறக்குன்னு
அஸுரன்மார் ஸுரன்மாராயீடுன்னு அமரன்மார் மரங்ஙளாயீடுன்னு
அஜம் சத்து கஜமாய் பிறக்குன்னு கஜம் சத்தங்ஙஜவுமாயீடுன்னு
நரி சத்து நரனாய் பிறக்குன்னு நாரி சத்துடனோரியாய் போகுன்னு
க்ருப கூடாதெ பீடிப்பிச்சீடுன்ன ந்ருபன் சத்து க்ருமியாய் பிறக்குன்னு
ஈச்ச சத்தொரு பூச்சையாயீடுன்னு ஈச்வரன்டெ விலாஸங்ஙளிங்ஙனே

**பொருள்** – ஸ்வர்க்கத்தில் வசித்து வந்த ஒரு ஜீவன், மீண்டும் பூமிக்குத் திரும்பும்போது, அந்தணனாகப் பிறக்கக்கூடும். ஆனால், அதே ஜீவன் முன்பு பலவிதமான கொடூரமான கர்மங்கள் செய்திருந்தால், சண்டாளனாகப் பிறக்கக்கூடும். மரணத்தின் பின்னர் மீண்டும் பிறவி உண்டாகும்போது: அஸுரன் ஒருவன் தேவனாகவும், தேவன் ஒருவன் மரமாகவும், ஆடு ஒன்று யானையாகவும், யானை ஒன்று ஆடாகவும், புலி ஒன்று மனிதனாகவும், பெண் ஒருவள் நரியாகவும், தனது குடிமக்களை வாட்டிய அரசன் ஒருவன் க்ருமியாகவும், ஈ ஒன்று பூனையாகவும் பிறக்கக்கூடும். இப்படியாக ஸர்வேச்வரனின் லீலை உள்ளது.

**விளக்கம்** - புண்ணியங்களின் பலன் கழிந்து பூமிக்குத் திரும்பும் ஜீவன் ஒருவன் அந்தண குலத்தில் பிறக்கலாம். இந்த அந்தணன் பாவகர்மங்களில் ஈடுபடும்போது அடுத்த பிறவியில் சண்டாளனாகப் பிறவி எடுக்கிறான். இவ்விதம் பார்க்கும்போது கர்மபலன்கள்

காரணமாகப் பல்வேறு பிறவிகள் உண்டாகிறது. தேவன் மரமாகப் பிறந்தது நளகூபரர் விஷயத்தில் காணலாம்.

கீழ்மேலிங்ஙனே மண்டுன்ன ஜீவன்மார் பூமியீன்னத்ரே நேடுன்னு கர்மங்ஙள்
ஸீமையில்லாதோளம் பல கர்மங்ஙள் பூமியீன்னத்ர நேடுன்னு ஜீவன்மார்
அங்ஙனெ செய்து நேடி மரிச்சுட னன்ய லோகங்ஙளோரோன்னி னோரோன்னில்
சென்னிருன்னு புஜிக்குன்னு ஜீவன்மார் தங்ஙள் செய்தோரு கர்மங்ஙள் தன் பலம்
ஒடுங்ஙீடுமதொட்டு நாள் செல்லும்போள் உடனே வன்னு நேடுன்னு பின்னெயும்
தன்டேதன்டே க்ருஹத்திங்கல் நின்னுடன்
கொண்டு போன்ன தனம் கொண்டு நாமெல்லாம்
மற்றெங்ஙானுமொரேடத்தி ருன்னீட்டு விற்றுனென்னு பறயும் கணக்கினே

**பொருள்** – இப்படியாக ஜீவன்கள் கீழ்லோகம், மேல்லோகம் என்று மாற்றி மாற்றி சுழன்றபடி உள்ளனர். ஆனால் அவர்கள் கர்மம் செய்வதற்கும், கர்மபலன் கழிப்பதற்கும் பூமிக்குத்தான் வரவேண்டும். எல்லையற்ற பலவிதமான கர்மங்களும், கர்மபலன்களும் அவர்களுக்கு பூமியில் மட்டுமே கிட்டுகின்றன. ஆக அவர்கள் பூமியில் கர்மங்களைச் செய்கிறார்கள்; அதன் பலனைத் தேடிக்கொள்கிறார்கள்; மரணம் அடைந்தவுடன் ஸ்வர்க்கம், நரகம் என்றுள்ள பலவிதமான லோகங்களுக்குச் சென்று தங்களுடைய கர்மபலன்களை கழிக்கிறார்கள். இப்படியாக உள்ள கர்மபலன்கள் கழிந்த பின்னர், மீண்டும் இந்த உலகிற்குத் திரும்பியவர்களாக, மீண்டும் கர்மங்களைத் தேடத் தொடங்குகிறார்கள். நம்முடைய வீட்டிலிருந்து வெளியூர் செல்லும்போது கொண்டு போகும் செல்வங்களை, போன இடத்திலே செலவழிப்பது போன்று, பூமியில் சேர்த்த கர்மபலன்களை மற்ற லோகங்களுக்குச் சென்று கழிக்கிறார்கள்.

**விளக்கம்** - ஜனனம், மரணம் என்ற சுழற்சியில் இப்படியாக மேலும் கீழுமாகச் சென்று உழன்றபடி ஜீவன்கள் இருக்கின்றன. ஜன்மம் மற்றும் மோக்ஷம் ஆகியவற்றுக்கான கர்மங்கள் உற்பத்தியாகும் இடம் இந்தப் பூலோகமே ஆகும். ஒருவன் செய்த கர்மங்களின் புண்ணிய பலன்கள் ஸ்வர்க்கத்திலும், பாவ பலன்கள் நரகத்திலும் அனுபவிக்கப்படுகிறது. புண்ணிய பாவங்கள் ஒரு சமநிலையை அடையும்போது மீண்டும் இங்கு பிறவி உண்டாகிறது. பூமிக்குத் திரும்புவதற்கு முன்பாக இருந்து வரும் கர்மவாஸனைகள் காரணமாக, இங்கு வந்து அதே போன்ற கர்மங்களை ஜீவன் செய்யத் தொடங்குகிறான்.

இங்கு செய்யப்படும் கர்மங்களின் அடிப்படையில் மட்டுமே, மரணத்திற்குப் பின்னர் அவன் எந்த லோகத்தை அடைகிறான் என்பது முடிவாகிறது. அந்தந்த லோகங்களில், அந்தந்த கர்மங்களின் பலன்களை அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது. கர்மபலன் கழிந்த பின்னர், மீண்டும் பூமிக்கு வருகிறான். இது வீட்டிலிருந்து வெளியூர் செல்பவன், தான் சம்பாதித்த செல்வத்துடன் செல்வது போன்றதாகும். வெளியூர் செல்லும்போது எடுத்துச் செல்லப்பட்ட செல்வமானது, தாமஸகுணம் மேலோங்கும்போது செலவாகிறது. எடுத்துச் சென்ற செல்வம் தீர்ந்த பின்னர் மீண்டும் வீடு திரும்புகிறான்.

## பாரத தேசத்தின் மஹிமை

கர்மங்ஙள்க்கு விளநிலமாயாகிய (விளபூமியாகிய) ஜன்ம தேசமிப்பூமி அறிஞ்ஞாலும்
கர்ம நாசம் வருத்தேண மெங்கிலும் செம்மேமற்றெ (ட்டெ) ங்ஙும் ஸாதிய நிர்ணயம்
பக்தன்மார்க்கும் முமுக்ஷு ஜனங்ஙள்க்கும் ஸக்தராய விஷயீ ஜனங்ஙள்க்கும்
இச்சிசீடுன்ன தொக்கெ கொடுத்தீடும் விச்வ மாதாவு பூமி யறிஞ்ஞாலும்
விச்வநாதன்டே மூலப்ரக்ருதிதான் ப்ரத்யக்ஷேண விளங்ஙுன்னு பூமியாய்
அவனீதல பாலனத்தினல்லோ அவதாரங்ஙளும் பலதோர்க்கும்போள்
அது கொண்டு விசேஷிச்சும் பூலோகம் பதின்னாலிலு முத்தம மென்னல்லோ
வேத வாதிகளாய முனிகளும் வேதவும் பஹுமானிச்சு சொல்லுன்னு

பொருள் – நாம் பிறந்த இடமாகிய இந்தப் பூமி என்பதே, நமது அனைத்து கர்மங்களும் விதைக்கப்படும் இடமாக உள்ளது என்று அறியவேண்டும். நம்முடைய கர்மங்களை முற்றிலுமாக அழித்தல் என்பது, இந்த இடத்தைத் தவிர வேறு எங்கும் செய்ய இயலாது என்பது உறுதியாகும். ஸ்ரீகுருவாயூரப்பனின் பக்தர்கள், மோக்ஷத்தில் விருப்பம் உள்ள முமுக்ஷுக்கள், உலகவிஷயங்களில் ஆழ்ந்த பற்றுதல் உள்ளவர்கள் ஆகிய அனைவருக்கும், அவரவர்கள் விரும்புவது அனைத்தையும், ஒரே போன்று அவர்களுக்கு அளித்து மகிழ்பவள் நம்முடைய தாயாகிய இந்தப் பூமிதேவி ஆவாள். அனைத்து லோகங்களுக்கும் நாதனாகிய ஸர்வேச்வரனுடைய மூலப்ரக்ருதி என்பதே, நம்முடைய கண்களால் காணப்படுகின்ற பூமிதேவியாக உள்ளது. ஸர்வேச்வரனுடைய பல அவதாரங்களை எண்ணிப் பார்க்கும்போது, அவை அனைத்தும் இந்த பூமியைக் காப்பாற்றி ஆளும்பொருட்டே ஆகும் என்பதை உணரலாம். இப்படியாக ஸர்வேச்வரன் இதனைச் சிறப்பாக எண்ணியபடி இருப்பதால் அல்லவோ, பதினான்கு லோகங்களில் இந்தப் பூமியானது மிகவும் உயர்ந்தது என்று குறிப்பிட்டுக் கூறப்படுகிறது? இப்படியாக வேதங்கள் மூலம் ஸர்வேச்வரனைக் குறித்து நன்றாக அறிந்த முனிவர்கள் மட்டும் அல்லாமல், அந்த வேதங்களும் பூமியைப் புகழ்ந்தபடி உள்ளன.

விளக்கம் - கர்மம் என்ற ஐச்வர்யம் விளைகின்ற நிலமாக இந்தப் பூமி உள்ளது. மேலும், கர்மம் முழுவதுமாகக் கழியும் இடமும் இந்தப் பூமியே ஆகும். இந்தப் பூமியில் வாழும் காலம்வரை, பக்தர்களுக்கு ஸர்வேச்வரன் மீது உள்ள மிகுந்த ஈடுபாடு காரணமாக ப்ரேமை வடிவான பக்தி கைகூடுகிறது; மோக்ஷத்தில் விருப்பம் கொண்ட முமுக்ஷுக்களுக்கு அனைத்து கர்மங்களும் விலகி, மோக்ஷம் கிட்டுகிறது; உலக விஷயங்களில் ஈடுபட்டபடி உள்ளவர்களுக்கு, அந்த விஷயங்களின் மூலம் கிட்டுவதான சுகபோகங்கள் இங்கு தடையின்றி கிட்டுகின்றன. ஆகவே, ஒவ்வொருவருக்கும் அவரவருடைய விருப்பதின்படி, அனைத்தும் அளிக்கும் தாயாக இந்தப் பூமாதேவி உள்ளாள்.

லவணாம்புதி மத்யே விளங்ஙுன்ன ஜம்பு த்வீபொரு யோஜன லக்ஷவும்
ஸப்த த்வீபுகளுண்டதி லெத்றயும் உத்தமமென்னு வாழ்த்துன்னு பின்னெயும்
பூ பத்மத்தின்னு கர்ணிகயாயிட்டு பூதரேந்த்ரனதி லல்லோ நில்குன்னு
இதி லொம்பது கண்டங்ஙள் உண்டல்லோ அதி லுத்தமம் பாரத பூதலம்
ஸம்மதராய மாமுனி ச்ரேஷ்டன்மார் கர்ம க்ஷேத்ரமென்னல்லோ பறயுன்னு
கர்ம பீஜ மதீன்னு முளக்கேண்டு ப்ரஹ்ம லோகத்தி ரிக்குன்னவர்கள்க்கும்
கர்ம பீஜம் வரட்டி கலஞ்ஞுடன் ஜன்ம நாசம் வருத்தேணமெங்கிலும்
பாரதமாய கண்ட மொழிஞ்ஞுள்ள பாரில்லெங்ஙு மெளுதல்ல நிர்ணயம்
அத்ற முக்யமாயுள்ளொரு பாரதமி ப்ரதேச மென்னெல்லாருமோர்க்கணம்

பொருள் – லவணஸமுத்திரம் எனப்படும் உப்புக்கடலின் நடுவில் ஜம்புத்வீபம் உள்ளது (இந்தப் பூலோகம் ஏழு த்வீபங்கள் கொண்டது; அவையாவன - ஜம்பூ, ப்ளக்ஷ, புஷ்கர, குஸ, க்ரௌஞ்ச, சக, ஸால்மல த்வீபங்கள் ஆகும்; இவற்றில் நாம் உள்ள ஜம்புத்வீபம் ஆகும்). அது ஒரு லக்ஷம் யோஜனை பரப்பளவு உள்ளதாகும் (ஒரு யோஜனை என்பது சுமார் 10 மைல்). இது போன்று பூமியில் ஏழு த்வீபங்கள் உள்ளன. அவற்றுள் இந்த ஜம்புத்வீபம் என்பதே மிகவும் சிறந்தது என்று மீண்டும் மீண்டும் போற்றப்படுகிறது. இந்த ஜம்புத்வீபத்தை ஒரு தாமரை என்று கொண்டால், அதன் நடுவில் மேருமலை கம்பீரமாக உள்ளது. இந்த ஜம்புத்வீபத்தில் ஒன்பது கண்டங்கள் உள்ளன (அவையாவன - இந்த்ரத்வீபம், சுசேரு, தாம்ரபர்ணம், கபஸ்திமான், நாகத்வீபம், ஸௌம்யத்வீபம், காந்தர்வம், வாருணம், பாரதம்). இவற்றில் பாரதம் என்னும் பகுதியே மிகவும் உயர்ந்ததாகும். அனைத்தும் அறிந்தவர்கள் என்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட முனிவர்கள் எல்லோரும் இந்தப் பாரதத்தையே அனைத்து கர்மங்களுக்கும் ஏற்ற இடமாக

உரைத்தனர். ப்ரம்மலோகத்தில் இருக்கும் ஜீவனுக்கான கர்மவிதையும் இந்தப் பூமியில் மட்டுமே விதைக்கப்பட்டு முளைக்கிறது. ப்ரம்மலோகத்தில் உள்ளவர்களுக்குக் கூட, தங்களுடைய கர்மங்கள் என்ற விதையை வறுத்து, அதனை மீண்டும் முளைக்கவிடாமல் தடுத்து, பிறவிகளிலிருந்து விடுதலை கிட்டவேண்டும் என்றால், அது இந்தப் பாரதத்தில் மட்டுமே கைகூடும் என்பது உறுதி; பாரதம் அல்லாமல் உள்ள எந்த கண்டத்திலும் இது நிறைவேறாது. ஆகவே பாரதம் என்பது மிகவும் முக்கியமான இடம் என்பதை எல்லாரும் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும்.

## கலிகாலத்தின் மஹிமை

யுகம் நாலிலும் நல்லூ கலியுகம் ஸுகமே தன்னெ முக்தி வருத்துவான்
க்ருஷ்ண க்ருஷ்ணா முகுந்தா ஜனர்த்தனா க்ருஷ்ண கோவிந்த ராமாஎன்னிங்ஙனெ
திருநாம ஸங்கீர்த்தனமென்னியே மற்றேதுமல்ல ப்ரயத்ன மறிஞ்ஞாலும்
அது சிந்திச்சு மற்றுள்ள லோகங்ஙள் பதிம்மூன்னிலுமுள்ள ஜனங்ஙளும்
மற்று த்வீபுகளாறிலுமுள்ளோரும் மற்று கண்டங்ஙளெட்டிலு முள்ளோரும்
மற்று மூன்னு யுகங்ஙளி லுள்ளோரும் முக்தி தங்ஙள்க்கு ஸாத்யமல் லாய்கயால்
கலிகாலத்தெ பாரத கண்டத்தெ கலிதாதரம் கை வணங்ஙீடுன்னு
அதில் வன்னொரு புல்லாயிட்டெங்கிலும் இது காலம் ஜனிச்சு கொண்டீடுவான்
யோக்யத வருத்தீடுவான் தக்கொரு பாக்யம் போராதெ போயல்லோ தைவமே
பாரத கண்டத்திங்கல் பிறன்னொரு மானுஷர்க்கும் கலிக்கும் நமஸ்காரம்

பொருள் – நான்கு யுகங்களில் மிகவும் எளிதாக மோக்ஷம் அளிப்பது கலியுகமே ஆகும். இதன் காரணம் கலியுகத்தில் "க்ருஷ்ணா, க்ருஷ்ணா, முகுந்தா, ஜனார்த்தனா, க்ருஷ்ணா, கோவிந்தா, ராமா" என்று அவனுடைய திருநாமங்களை உச்சரித்தல் என்பதே முக்தி கிட்டப் போதுமானது. இப்படியாக திருநாம ஸங்கீர்த்தனம் அல்லாமல், வேறு கடினமான முயற்சிகள் ஏதும் அவசியம் இல்லை என்று அறியவேண்டும். இப்படியாக உள்ள பாரத கண்டத்தின் மஹிமை, கலியுகத்தின் மேன்மை முதலியவற்றை அறிந்த காரணத்தினால்தான் – பூமி அல்லாத மற்ற பதின்மூன்று லோகத்தில் உள்ளவர்களும் (பூமி அல்லாமல் உள்ள பதின்மூன்று லோகங்கள் - ஸத்யலோகம், தபோலோகம், ஜனலோகம், மஹர்லோகம், ஸுவர்லோகம், புவர்லோகம், அதலம், விதலம், ஸுதலம், தலாதலம், மகாதலம், ரஸாதலம் மற்றும் பாதாளம்), பாரதம் இருக்கும் ஜம்புத்வீபம் அல்லாத மற்ற ஆறு த்வீபங்களில் உள்ளவர்களும், பாரத கண்டம் அல்லாத மற்ற எட்டு கண்டங்களில் உள்ளவர்களும், கலியுகம் அல்லாமல் மற்ற மூன்று யுகங்களில் வாழ்ந்தவர்களும்

தங்களுக்கு முக்தி என்பது எளிதாகக் கிட்ட வாய்ப்பு இல்லை என்று உணர்கிறார்கள். இதனால்தான் அவர்கள் அனைவரும் மிகவும் பணிவன்புடன் பாரத கண்டத்தையும், கலியுகத்தையும் வணங்கி நிற்கிறார்கள். இவர்கள் அனைவரும், “ஸர்வேச்வரா! குருவாயூரப்பா! இந்த பாரத கண்டத்தில், கலிகாலத்தில் ஒரு புல் போன்றாவது பிறவி எடுக்க எங்களுக்குப் பாக்கியமும் தகுதியும் இல்லாமல் போனதே! ஆகவே நாங்கள் பாரத கண்டத்தில் பிறந்த மனிதர்கள் ஒவ்வொருவரையும் வணங்கி நிற்கிறோம். மேலும் கலிபுருஷனையும் வணங்குகிறோம்”, என்கிறார்கள்.

## என்ன குறை உள்ளது?

என்னெல்லாம் புகழ்த்தீடுன்னு மற்றுள்ளோர் என்ன தென்தின்னு நாம் பறஞ்ஞீடுன்னு?
காலமின்னு கலியுகமல்லயோ? பாரதமி ப்ரதேசவுமல்லயோ?
ஜன்மவு நரஜன்ம மிதல்லயோ? செம்மே நன்னாய் நிரூபிப்பினெல்லாரும்
ஹரி நாமங்ஙளில்லாதெ போகயோ? நரகங்ஙளில் பேடிகுறகயோ?
நாவு கூடாதெ ஜாதன்மாராகயோ? நமுக்கின்னி விநாஸமில்லாய்கயோ?
கஷ்டம் கஷ்டம் நிரூபணம் கூடாதெ சுட்டுத் தின்னின்னு ஜன்மம் பழுதே நாம்

பொருள் – இது போன்று மற்றவர்கள் அனைவரும் புகழ்கிறார்கள் என்று ஏன் கூறவேண்டும் (நாம் அறியவில்லையோ)? இந்தக் காலம் கலிகாலம் அல்லவோ என்றும், இந்த இடம் பாரத கண்டம் அல்லவோ என்றும், இந்தப் பிறவி மனிதப்பிறவி அல்லவோ என்றும் அனைவரும் நன்றாகச் சிந்திப்பீராக. ஸ்ரீஹரியின் திருநாமங்கள் இல்லாமல் போனதோ (நாம் ஏன் அவற்றைக் கூறாமல் உள்ளோம் என்கிறார்)? பலவிதமான நரகங்களைக் குறித்து பயம் குறைந்து போகலாமோ (அந்தப் பயக்குறைவு காரணமாகவே இன்று பல பாவங்களைச் செய்கிறோம் என்கிறார்)? நாம் நாக்கு இல்லாமல் உள்ளோமோ (திருநாம ஸங்கீர்த்தனம் ஏன் செய்யாமல் உள்ளோம் என்கிறார்)? நாம் மரணம் அடைந்து அழியாமல் இருப்போம் என்று விபரீதமாக எண்ணத் தொடங்கிவிட்டோமோ? இது என்ன விபரீதம்! இது போன்று பலவிதமான விபரீதங்களைச் செய்து, நம்முடைய பிறவியை வீணடித்துக் கொள்கிறோம் என்று எண்ணாமல் உள்ளோமே! கஷ்டம், கஷ்டம்.

## கிட்டுவதற்கு அரிய மனிதப் பிறவி

எத்ர ஜன்மம் ப்ரயாஸ பெட்டிக்காலம் அத்ர வன்னு பிறன்னு ஸுக்ருதத்தால்
எத்ர ஜன்மம் மலத்தில் கழிஞ்ஞுதும் எத்ர ஜன்மம் ஜலத்தில் கழிஞ்ஞுதும்
எத்ர ஜன்மங்ஙள் மண்ணில் கழிஞ்ஞுதும் எத்ர ஜன்மம் மரங்ஙளாய் நின்னதும்
எத்ர ஜன்மம் அரிச்சு நடன்னதும் [எத்ர ஜன்மம் பறன்னு நடன்னதும்]
எத்ர ஜன்மம் ம்ருகங்கள் பசுக்களாய் [அத்ர வன்னிட்டீ வண்ணம் லபிச்சொரு]
மர்த்ய ஜன்மத்தின் மும்பே கழிச்சு நாம்
எத்ரயும் பணி பெட்டிங்ஙு மாதாவின் கர்ப்ப பாத்ரத்தில் வீணதறிஞ்ஞாலும்
பத்து மாசம் வயிற்றி(ட்டி)ல் கழிஞ்ஞு போய் பத்து பந்தீராண்டுண்ணியாயிட்டும் போய்
தன்னெத்தான் அபிமானிச்சு பின்னேடம் தன்னெத்தானறியாதெ கழியுன்னு
இத்ர காலமிரிக்கு மினியென்னும் ஸித்தமே (ஸத்யமோ) நமுக்கேது மொன்னில்லல்லோ
நீர்போள போலெயுள்ளோரு தேஹத்தில் வீர்ப்பு மாத்ரமுண்டிங்ஙனே காணுன்னு
ஓர்த்தறியாதெ பாடுபெடுன்னேரம் நேர்த்து போகுமதென்னே பறயாவூ
அத்ரமாத்ர மிரிக்குன்ன நேரத்து கீர்த்திச்சீடுன்னதில்ல திருநாமம்

பொருள் – இந்தப் பிறவி கிட்டுவதற்கு முன்பாக நாம் எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்து, சொல்லவொண்ணாத துன்பங்களை அனுபவித்துள்ளோம்! நம்முடைய நற்பலன் காரணமாக இங்கு வந்து பிறந்துள்ளோம். மனிதனாக உள்ள இந்தப் பிறவிக்கு முன்பாக எத்தனை பிறவிகள் மலத்தில் கிடக்கும் புழுக்களாகவும், நீரில் வாழும் உயிர்களாகவும், மண்ணில் இருக்கும் புழு பூச்சிகளாகவும், மரங்களாகவும், ஊர்ந்து செல்லும் பாம்பு போன்றவைகளாகவும், பறவைகளாகவும், விலங்குகளாகவும் நாம் பிறந்தும் இறந்தும் செய்தோம் என்று சிந்திப்பீர்களாக. இப்படியாகப் எத்தனையோ ஜன்மங்களில் நாம் மிகவும் துயரம் அடைந்த பின்னர், மனிதனாக ஒரு தாயின் கர்ப்பத்தில் வந்து விழுந்தோம் என்று அறியவேண்டும். இப்படியாகக் கர்ப்பத்தில் வந்து சேர்ந்த பின்னர், நம்முடைய வாழ்வில் பத்து மாதங்கள் அந்த கர்ப்பப்பையில் கழிகிறது. மேலும் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் ஏதும் அறியாத குழந்தைப் பருவத்தில் கழிகிறது. அதன் பின்னர் எஞ்சியுள்ள வாழ்க்கை முழுவதும் இந்தச் சரீரமே ஆத்மா என்னும் சிந்தையிலும், நாம் யார் என்று அறியாமலும் உள்ள நிலையில் கழிகிறது. இந்த உலகில், இந்தச் சரீரத்துடன் இத்தனை காலம் நாம் உயிரோடு இருப்போம் என்னும் உறுதி நமக்கு ஏதும் இல்லை அல்லவோ? இந்தச் சரீரம் என்பது ஒரு நீர்க்குமிழி போன்றதே ஆகும். நீர்க்குமிழியில் காற்று உள்ளவரை மட்டுமே அது நிலைக்கும் என்பது போன்று, இந்தச் சரீரத்தில் பிராணன் உள்ளவரை மட்டுமே நிலைக்கும். நாம் நினைக்காதபோது, மிகுந்த துயரத்தில் இருக்கும்போது, அந்தப் பிராணன் என்பது இல்லாமல் போய்விடும். இப்படியாக மிகவும் குறுகிய காலம் மட்டுமே இருக்கும் இந்த வாழ்க்கையில் நாம் பகவானின் திருநாமத்தை உச்சரிக்காமல் இருக்கிறோம்.

## ஸம்ஸார வர்ணனை

ஸ்தானமானங்ஙள் சொல்லி கலஹிச்சு நாணம் கெட்டு நடக்குன்னிது சிலர்
மதமத்சரம் சிந்திச்சு சிந்திச்சு மதி கெட்டு நடக்குன்னிது சிலர்
சஞ்சலாக்ஷிமார் வீடுகளில் புக்கு குஞ்சிராமன் களிக்குன்னிது சிலர்
கோலகங்ஙளில் ஸேவகராயிட்டு கோலம் கெட்டி ஞெளியுன்னிது சிலர்
சாந்தி செய்து புலர்த்துவானாயிட்டு ஸந்த்யயோளம் விஷக்குன்னிது சிலர்
கொஞ்சி கொண்டு வளர்த்தொரு பைதலெ கஞ்ஞிக்கில்லான்னு வில்குன்னிது சிலர்
அம்மய்க்கும் புனரச்சனும் பார்யய்க்கும் உண்மான் போலும் கொடுக்குன்னில்ல சிலர்
அக்னி ஸாக்ஷிணியாயொரு பத்னியெ ஸ்வப்னத்தில் போலும் காணுன்னில்ல சிலர்
ஸத்துக்கள் கண்டு சிக்ஷிச்சு சொல்லும்போள் சத்ருவெ போலெ க்ருத்திக்குன்னு சிலர்
வந்திதன்மாரெ காணுன்ன நேரத்து நிந்திசத்ரே பறயுன்னிது சிலர்
காண்க நம்முடெ ஸம்ஸாரம் கொண்டத்ரே விச்வமீவண்ணம் நில்பூவென்னும் சிலர்
ப்ராஹ்மண்யம் கொண்டு குந்திச்சு குந்திச்சு ப்ரம்மாவும் எனிக் கொவ்வாயென்னும் சிலர்
அர்தாசய்க்கு விருது விளிப்பிப்பான் அக்னி ஹோத்ராதி செய்யுன்னிது சிலர்
ஸ்வர்ணங்ஙள் நவ ரத்னங்ஙளே கொண்டும் எண்ணம் கூடாதே வில்குன்னிது சிலர்
மத்தேபம் கொண்டு கச்சவடம் செய்தும் உத்தம துரங்கங்ஙளது கொண்டும்
அத்ரயுமல்ல கப்பல் வெப்பிச்சிட்டு மெத்ர நேடுன்னி தர்த்தம் சிவ சிவ

**பொருள்** – ஒரு சிலர் தங்களுடைய பதவி, அதிகாரம் முதலானவற்றை உரைத்தபடியும், எண்ணியபடியும் எந்தவிதமான வெட்கமும் இல்லாமல் ஒருவருக்கொருவர் வாக்கு வாதங்களில் ஈடுபட்டபடி உள்ளனர். ஒரு சிலர் போட்டி, பொறாமை, அஹங்காரம் முதலிய காரணங்களால் தங்களைப் பற்றியே எண்ணியபடி இருந்து, தங்களுடைய அறிவை முழுவதும் இழக்கிறார்கள். ஒரு சிலர் தாழ்ந்த நடத்தை உள்ள பெண்களின் வீடுகளுக்குச் சென்றபடி இருந்து, அவர்கள் கூறுவதற்கு ஏற்ப வித்தைக்காரனின் குரங்கு போல ஆடுகிறார்கள். ஒரு சிலர் அரண்மையில் வேலைக்காரர்களாக உள்ளபோதிலும், தாங்களே எஜமானர்கள் என்று கூறியபடி திரிகிறார்கள். தங்களுடைய பிழைப்பிற்காக மட்டுமே ஒரு சிலர் திருக்கோயில்களில் ஸந்த்யாகாலம் வரை பணி செய்தபடி இருக்கிறார்கள். ஒரு சிலர் தங்களுடைய தாய், தந்தை, மனைவி முதலானவர்க்கு உண்ண உணவு கூட அளிக்காமல் இருக்கிறார்கள். ஒரு சிலர் அக்னியை முன்னிறுத்தி, முறைப்படி திருமணம் செய்து கொண்ட மனைவியை, தங்களுடைய கனவில் கூட காணாமல் உள்ளனர். ஒரு சிலர், தங்களுக்கு நல்ல புத்தி உரைக்கும் சாதுக்களை, விரோதிகளைப் பார்ப்பது போன்று நோக்கி, அவர்களைத் தூஷிக்கிறார்கள். ஒரு சிலர், மரியாதை

கொடுக்கவேண்டிய சான்றோர்களை நோக்கும்போது, அவர்களை மதிக்காமல் நிந்தனை செய்கிறார்கள். ஒரு சிலர், "என்னுடைய பேச்சுத் திறமையால் மட்டுமே இந்த உலகம் இயங்கியபடி உள்ளது", என்றபடி உள்ளனர். ஒரு சிலர், "என்னுடைய அந்தணத்தன்மை காரணமாக நான் நான்முகனைக் காட்டிலும் பெரியவன்; நான்முகன் எனக்கு ஒப்பானவன் அல்லன்", என்கிறார்கள். ஒரு சிலர் அதிகமான பணம், புகழ் முதலானவற்றைச் சம்பாதிக்கும் பொருட்டு அக்னிஹோத்ரம் போன்ற யஜ்ஞங்களைச் செய்தபடி உள்ளனர். ஒரு சிலர் எல்லையற்ற லாபம் சம்பாதிப்பதற்காக தங்கத்தையும், இரத்தினக்கற்களையும் அதிக அளவில் விற்றபடி உள்ளனர். ஒரு சிலர் யானைகளைக் கொண்டும், குதிரைகளைக் கொண்டும், கப்பல்களைக் கொண்டும் வியாபாரம் செய்தபடி உள்ளனர். இது போன்று அற்பமான விஷயங்களை எத்தனை எத்தனைதான் தேடியபடி இருப்பார்களோ தெய்வமே!

வ்ருத்தியும் கெட்டு தூர்த்தராய் எப்பொழும் அர்த்தத்தெ கொதிச்செத்ர நசிக்குன்னு
அர்த்தமெத்ர வளரெ யுண்டாயாலும் த்ருப்தியாகா மனஸ்ஸின்னொரு காலம்
பத்து கிட்டுகில் நூறு மதியென்னும் சதமாகில் ஸஹஸ்ரம் மதியென்னும்
ஆயிரம் பணம் கையிலுண்டாகும்போழ் அயுதமாகிலாச்சர்யம் என்னதும்
ஆசயாயுள்ள பாசமதிங்கேன்னு வேர் விடாதெ கரேறுன்னு மேல்குமேல்
ஸத்துக்கள் சென்னிரன்னாலாய அர்த்தத்தில் ஸ்வல்பமாத்ரம் கொடா சில துஷ்டன்மார்
சத்து போன்னேரம் வஸ்த்ரம் அது போலு மொத்திடா கொண்டு போவா னொருத்தர்க்கும்

பொருள் – தங்களுடைய கடமைகள் என்ன, ஆசார ஒழுக்கங்கள் என்ன என்பதைக் கூட மறந்துபோய், செல்வத்தைக் குறித்து மட்டுமே ஆசைப்பட்டு அழிகிறார்கள். இப்படியாக எந்த அளவு செல்வம் உண்டானாலும், அது கொண்டு அவர்கள் மனநிறைவு அடைவதில்லை. ஒருவனுக்கு பத்து ரூபாய் கிடைத்தால், நூறு ரூபாய் கிட்டவேண்டும் என்று எண்ணுகிறான்; நூறு ரூபாய் கிடைத்தால், ஆயிரம் ரூபாய் கிட்டவேண்டும் என்று எண்ணுகிறான்; ஆயிரம் ரூபாய் கிடைத்தால், மேலும் அதிக பணம் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுவது வியப்பாக உள்ளது அல்லவோ? பாசம் என்னும் கயிற்றின் கட்டுதலை விடாமல், அதனை மேலும் இறுக்கமாகக் கட்டிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களிடம் சாதுக்கள் சென்று யாசகம் கேட்டால், தங்களிடம் உள்ள பெரும் செல்வத்திலிருந்து சிறிதளவு கூட அளிக்கமாட்டார்கள். மரணம் அடைந்த பின்னர், யாராக இருந்தாலும், அவர்கள் உடுத்தியுள்ள ஆடையைக் கூட அவர்களால் எடுத்துச் செல்ல இயலாது என்று அறியவேண்டும்.

பச்சாதாபமொ ரெள்ளோளமில்லாதெ விச்வாச பாதகத்தெ கருதுன்னு
வித்தத்திலாச பற்றுக ஹேதுவாய் ஸத்யத்தெ த்யஜிக்குன்னு சிலரஹோ
ஸத்யமென்னது ப்ரஹ்மம் அதுதன்னே ஸத்யமென்னு கருதுன்னு ஸத்துக்கள்
வித்ய கொண்டறியேண்ட தறியாதெ வித்வானென்னு நடிக்குன்னிது சிலர்
குங்குமத்தின்டே வாஸமறியாதெ குங்குமம் சுமக்கும் போலெ கர்த்தபம்
க்ருஷ்ண க்ருஷ்ணா நிரூபிச்சு காணும்போள்
த்ருஷ்ண கொண்டே ப்ரமிக்குன்னிதொக்கெயும்

பொருள் – இந்த உலகில் உள்ளவர்களை வஞ்சிப்பது குறித்தும், அவர்களுக்கு எப்போதும் வஞ்சனை செய்தபடி இருப்பது குறித்தும் சிறிதளவாவது மனவருத்தம் கொள்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. செல்வத்தின் மீது உள்ள ஆசை மற்றும் பற்றுதல் காரணமாக ஒரு சிலர் உண்மை, நேர்மை, கண்ணியம் போன்ற பலவற்றையும் தியாகம் செய்கிறார்களே! என்ன கஷ்டம்! ஸத்தியம் என்றால் அது ப்ரஹ்மம் மட்டுமே என்று ப்ரஹ்மத்தைக் குறித்து அறிந்த சாதுக்கள் கூறுகிறார்கள்; ஆனால், வித்யை மூலம் எதனை அறியவேண்டும் என்று கூட அறியாமல் உள்ளவர்கள், தங்களை வித்வான் என்று கூறிக் கொள்கிறார்கள். தான் சுமக்கும் குங்குமப்பூவைக் குறித்து ஏதும் அறியாமல் கழுதை அதனைச் சுமப்பது போன்று, ப்ரஹ்மத்தை அறியாத இவர்களின் வித்யையும் உள்ளது. இவை அனைத்தையும் எண்ணிப் பார்க்கும்போது, இந்த மாயை அனைத்திற்கும் காரணமாக ஆசை உள்ளது என்று அறியலாம்.

## வைராக்யம்

எண்ணி எண்ணி குறையுன்னிதாயுசும் மண்டி மண்டி கரேறுன்னும் மோஹவும்
வன்னுவோணம் கழிஞ்ஞு விஷுவென்னும் வன்னிலெல்லோ திருவாதிர யென்னும்
கும்ப மாஸத்திலாகுன்னு நம்முடெ ஜன்ம நக்ஷத்ர மஸ்வதி நாளென்னும்
ச்ராத்தமுண்டஹோ வ்ருச்சிக மாஸத்தில் ஸத்யயொன்னு மெளுதல்லினியென்னும்
உண்ணியுண்டாயி வேள்பிச்சதிலொரு உண்ணி யுண்டாயி கண்டாவூ ஞானென்னும்
கோணிக்கல் தன்னெ வன்ன நிலமினி காணமென்னு மெடுப்பிக் கருதென்னும்
இத்தமோரோன்னு சிந்திச்சிரிக்கவெ சத்து போகுன்னு பாவம் சிவ சிவ

**பொருள்** – நம்முடைய ஆயுள் என்பதை எண்ணியபடி உள்ளபோதே அது குறைந்தபடி உள்ளது. ஆனால் ஆசை என்பது மிகவும் வேகமாக நம்மிடம் கூடிக்கொண்டே செல்கிறது. ஒருவன் தனது மனதில் "ஓணம் வந்து சென்றுவிட்டது. அடுத்து விஷுவும் வந்தது. திருவாதிரைப் பண்டிகை இன்னமும் வரவில்லை. என்னுடைய பிறந்தநாள் கும்பமாதத்தில் (மாசி) வருகின்ற அஸ்வதியில் உண்டாகும். விருச்சிக மாதத்தில்

(கார்த்திகை) ஒரு ச்ரார்த்தம் செய்யவேண்டியுள்ளது. அதனைத் தொடர்ந்து ஸத்ய என்னும் விருந்துக்கு எந்தவிதமான எளிதான வழியும் இல்லையே. எனக்கு ஒரு குழந்தை பிறக்கும். அதற்கு ஒரு திருமணம் செய்து வைத்த பின்னர், அதற்கு ஒரு குழந்தை பிறக்கும். அந்தப் பேரக்குழந்தையை நான் காணவேண்டும். எனக்குச் சொந்தமான நிலங்களை யாரும் அபகரிக்க நான் அனுமதிக்காமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்", என்று பலவிதமாக எண்ணியபடி இருக்கிறான். ஆனால் இப்படியாக எண்ணியபடி இருக்கும்போது திடீரென அவன் மரணம் அடையக்கூடும். தெய்வமே! இது என்ன கஷ்டம்!

எந்தினித்ர பறஞ்னு விசேஷிச்சும் சிந்திச்சீடுவி னாவோள மெல்லாரும்
கர்மத்தின்டே வலிப்பவு மோரோரோ ஜன்மங்ஙள் பலதும் கழிஞ்ஞென்னதும்
காலமின்னு கலியுகமாயதும் பாரத கண்டத்தின்டே வலிப்பவும்
அதில் வன்னு பிறன்னதுமெத்ர நாள் பழுதே தன்னெ போய ப்ரகாரவும்
ஆயுஸ்ஸின்டே ப்ரமாணம் இல்லாத்ததும் ஆரோக்யதோடிரிக்குன்னவஸ்தயும்
இன்னு நாம ஸங்கீர்த்தனம் கொண்டுடன் வன்னு கூடும் புருஷார்த்த மென்னதும்
இன்னு தெட்டியாலித்ர எளுப்பமாய் என்னு மேலிலீவண்ணம் வருமென்னும்
இனியுள்ள நரக பயங்ஙளும் இன்னு வேண்டும் நிரூபண மொக்கெயும்
எந்தினு வ்ருதா காலம் களயுன்னு? வைகுண்டத்தின்னு பொய்க்கொள்வி னெல்லாரும்

பொருள் – இத்தனை விவரங்களும் ஏன் தெளிவாக உரைக்கப்பட்டன என்பதை அனைவரும் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மேலும் நீங்கள் சிந்திக்க வேண்டியது எதனைக் குறித்து என்றால் – நீங்கள் செய்த பலவிதமான கர்மங்களின் வலிமை, எத்தனை எத்தனை பிறவி எடுத்தீர்கள், இது கலியுகம், நம்முடைய பாரததேசத்தின் மேன்மை, இதில் நாம் வந்து பிறந்தமை, நம்முடைய காலத்தை எந்த அளவு வீணடித்துள்ளோம், நம்முடைய ஆயுள்காலம் எந்த அளவு என்பதற்கு எந்தச் சான்றும் இல்லாத நிலை, நாம் ஆரோக்கியத்துடன் இருப்போமோ என்று அறியாத நிலை, இன்று ஸர்வேச்வரனின் திருநாம ஸங்கீர்த்தனம் செய்தால் நமக்குக் கிட்டவல்ல புருஷார்த்தம் என்ன, இன்று இதனைச் செய்யாமல் தவறவிட்டால் இது போன்ற ஒரு வாய்ப்பு மீண்டும் எளிதாக வேறு எந்த காலத்தில் கிட்டும், நாம் செய்த பாவங்களுக்கான நரகம் குறித்த பயம், இனிச் செய்ய உள்ள பாவங்களைக் குறித்த அச்சம் – போன்ற அனைத்தைக் குறித்தும் சிந்திப்பீர்களாக. இதனைச் செய்யாமல் ஏன் காலத்தை வீணாகக் கழிக்கிறீர்கள்? அனைவரும் ஸ்ரீவைகுண்டம் போக இயலும்.

கூடியல்ல பிறக்குன்ன நேரத்தும் கூடியல்ல மரிக்குன்ன நேரத்தும்
மத்யே யிங்ஙனெ காணுன்ன நேரத்து மத்ஸரிக்குன்னதெந்தினு நாம் வ்ருதா?
அர்த்தமோ புருஷார்த்த மிரிக்கவே அர்த்தத்தின்னு கொதிக்குன்ன தெந்து நாம்
மத்யான்னார்க்க ப்ரகாச மிரிக்கவே கத்யோதத்தெயோ மானிச்சு கொள்ளேண்டு?
உண்ணிக்ருஷ்ணன் மனஸ்ஸில் களிக்கும்போள்
உண்ணிகள் மற்று வேணமோ மக்களாய்?

**பொருள்** – நாமும், நம்முடைய சொந்தபந்தங்களும், நம்முடைய நண்பர்கள் முதலானவர்களும் ஒன்றாகச் சேர்ந்து பிறக்கவில்லை, ஒன்றாகச் சேர்ந்தும் இறக்கப் போவதில்லை. இப்படி உள்ளபோது, வாழ்கின்ற இடைப்பட்ட காலத்தில் ஒருவருக்கொருவர் எதனால் போட்டியும் பொறாமையும் கொண்டுள்ளோம்? மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாகிய முக்தி உள்ளபோது, எதனால் நாம் செல்வம் முதலானவற்றைக் குறித்து ஆசை கொள்கிறோம்? உச்சிப்பொழுதில் சூரியன் நடுவானில் பிரகாசத்துடன் உள்ள நேரத்தில், யாரேனும் மின்மினிப்பூச்சிகளின் வெளிச்சத்தை பெரிதாக மதிப்பார்களோ? நம்முடைய மனதில் நம்முடைய குழந்தையாக குருவாயூரப்பன் தவழ்ந்தபடி உள்ளபோது, நமக்கு வேறு குழந்தைகள் அவசியமோ?

மித்ரங்ஙள் நமுக்கெத்ர சிவ சிவ விஷ்ணுபக்தன்மாரில்லே புவனத்தில்?
மாயகாட்டும் விலாஸங்ஙள் காணும்போள் ஜாய காட்டும் விலாஸங்ஙள் கோஷ்டிகள்
புவனத்திலெ பூதிக ளொக்கெயும் பவனம் நமுக்காயதிது தன்னெ
விச்வநாதன் பிதாவும் நமுக்கெல்லாம் விச்வதாத்ரி சராசர மாதாவும்
அச்சனும் புனரம்மயு முண்டல்லோ ரக்ஷிச்சீடுவானுள்ள நாளொக்கெயும்
பிக்ஷான்னம் நல்லொரன்னவு முண்டல்லோ பக்ஷிச்சீடுக தன்னெ பணியுள்ளு?

பொருள் – இந்த உலகில் விஷ்ணுபக்தர்கள் எத்தனை எத்தனை உள்ளனர்! அவர்கள் அனைவரும் நம்முடைய நண்பர்களாக உள்ளனரே! இந்த உலகில் மாயை என்பது நமக்குச் செய்யும் சூழ்ச்சிகளைக் காணும்போது, ஒரு பெண் அல்லது பத்தினி செய்யும் செயல்கள் மிகவும் அற்பமே ஆகும். இந்த உலகம் முழுவதும் நம்முடைய வீடாக இருப்பதால், இங்குள்ள அனைத்தும் நமக்குச் சொந்தமே ஆகிறது. ஸர்வேச்வரனாகிய குருவாயூரப்பன் நம்முடைய தந்தையாகவும், பூமாதேவி நம்முடைய தாயாகவும் உள்ளார்கள். ஆக நாம் உள்ள காலம் முடிய நம்மைக் காப்பாற்ற நமக்குச் சிறந்த ஒரு தந்தையும், தாயும் உள்ளனர் அல்லவோ? நமக்குத் தேவையான உணவும் தாரளமாகக்

கிட்டுகிறது; அதனை எடுத்து உண்பது மட்டுமே நாம் செய்யவேண்டியதாகும் (இங்கு உணவு என்பது நேரடியான பொருளில் வரவில்லை. பக்தி, ஞானம், கர்மம், வைராக்யம் போன்ற பலவும் உணவு என்று கூறப்பட்டதாகக் கொள்க).

## நாமஜபம்

சக்தி கூடாதெ நாமங்ங ளெப்பொழும் பக்தி பூண்டு ஜபிக்கணம் நம்முடெ
ஸித்த காலம் கழிவோள மீவண்ணம் ச்ரத்தயோடெ வஸிக்கேண மேவரும்
காணாகுன்ன சராசர ஜாதியெ நாணம் கைவிட்டு கூப்பி ஸ்துதிக்கணம்
ஹரிஷாச்ரு பரி ப்ளுதனாயிட்டு பருஷாதிக ளொக்கெ ஸஹிச்சுடன்
ஸஜ்ஜனங்ஙளெ காணுன்ன நேரத்து லஜ்ஜ கூடாதெ வீணு நமிக்கணம்
மோகம் தீர்ன்னு மனஸி லயிக்கும்போள் சோகமென்னிட கூடுன்னு ஜீவனும்
பக்தி தன்னில் முழுகிச் சமஞ்ஞுடன் மத்தனெபோலெ ந்ருத்தம் குதிக்கணம்
பாரிலிங்ஙனெ ஸஞ்சரிசீடும்போள் ப்ராராப்தங்ஙளசேஷ மொழிஞ்ஞீடும்
விதிச்சீடுன்ன கர்மமொடுங்ஙும்போள் பதிச்சீடுன்னு தேஹமொரேடத்து
கொதிச்சீடுன்ன ப்ரஹ்மத்தே கண்டிட்டு குதிச்சீடுன்னு ஜீவனுமப்போழெ

**பொருள்** – நம்முடைய வாழ்வு என்பது முடியும்வரை நாம் ஆழ்ந்த பகவத்பக்தியுடன் கூடியவராக அவனுடைய திருநாமங்களை ஜபித்தபடி இருக்கவேண்டும். நமக்குக் கிடைத்துள்ள இந்த வாழ்வில், முடிந்தவரை நாம் பகவானைக் குறித்த ச்ரத்தையோடு இருத்தல்வேண்டும். எந்தவிதமான தயக்கமும், நாணமும் இல்லாமல் நாம் காணும் ஒவ்வொரு ஜீவராசியையும் இரண்டு கைகள் குவித்து, “இவை ஸர்வேச்வரனின் படைப்பு” என்று எண்ணியவராகத் துதிக்கவேண்டும். பகவானின் அடியார்களைக் காணும்போது, எந்தவிதமான நாணமும் இல்லாமல், அவர்களுடைய பரிகாசம் நிறைந்த பேச்சுகளையும் செயல்களையும் பொருட்படுத்தாமல், அவர்களுடைய கால்களில் விழுந்து வணங்க வேண்டும். பக்தி என்னும் வெள்ளத்தில் மூழ்கியவராக, குடிகாரன் ஒருவன் தன்னை மறந்து ஆடுவது போன்று ஆடவேண்டும். இப்படியாக இந்த உலகில் நாம் இருந்தால், நம்முடைய பலன் தரத்தொடங்கிய கர்மங்கள் (ப்ராரப்த கர்மங்கள்) அனைத்தும் மீதம் இல்லாமல் நீங்கிவிடும். நம்முடைய கர்மங்கள் அனைத்தும் கழியும்போது, இந்தச் சரீரம் விழுந்து நாம் மரணம் அடைகிறோம். அப்போது ஜீவன், தான் ஆசைப்பட்ட ப்ரஹ்மத்தைக் கண்டு ஆனந்தம் கொள்கிறது.

சக்தி வேறிட்டு ஸஞ்சரிசீடும்போள் பாத்ரமாயில்ல யென்னது கொண்டேதும்
பரிதாபம் மனஸ்ஸில் முழுகேண்டா திருநாமத்தின் மாஹாத்ம்யம் கேட்டாலும்
ஜாதி பார்க்கிலொ ரந்த்யஜனாகிலும் வேதவாதி மஹீஸுரனாகிலும்
நாவு கூடாதெ ஜாதன்மாராகிய மூகரெயங்ஙொழிச்சுள்ள மானுஷர்
எண்ணமற்ற திருநாமமுள்ளதில் ஒண்ணு மாத்ரமொரிக்க லொருதினம்
ஸ்வஸ்தனாயிட் டிரிக்கும்போழெங்கிலும் ஸ்வப்னத்தில் தானறியாதெ யெங்கிலும்
மற்றொன்னாயி பரிஹஸிச்செங்கிலும் மற்றொருத்தர்க்கு வேண்டி யென்னாகிலும்
ஏது திக்கிலிரிக்கிலும் தன்னுடெ நாவு கொண்டிது சொல்லி யென்னாகிலும்
அதுமல்லொரு நேரமொரு தினம் செவி கொண்டிது கேட்டு வென்னாகிலும்
ஜன்ம ஸாபல்ய மப்பொழே வன்னுபோய் ப்ரஹ்ம ஸாயுஜ்யம் கிட்டீடு மென்னல்லோ
ஸ்ரீதராசார்யன் தானும் பறஞ்ஞிது பாதராயணன் தானுமருள் செய்து
கீதயும் பறஞ்ஞீடுன்னதிங்ஙனே வேதவும் பஹுமானிச்சு சொல்லுன்னு
ஆமோதம் பூண்டு சொல்லுவின் நாமங்ஙள் ஆனந்தம் பூண்டு ப்ரஹ்மத்தில் சேருவான்
மதியுண்டெங்கி லொக்கெ மதியிது திருநாமத்தின் மாஹாத்ம்யமாமிது

பிழயாகிலும் பிழகேடென்னாகிலும் திருவுள்ளமருள்க பகவானே

பொருள் – ஒருவன் வைராக்யத்துடன் வாழ்ந்தபோதிலும், மரணத்திற்குப் பின்னர் முக்தி கிட்டவில்லை என்றால் வருந்தவேண்டியதில்லை. இப்படிப்பட்டவர்கள் திருநாமத்தின் மஹிமையைக் கேளுங்கள். மிகவும் தாழ்ந்த சண்டாளனாக இருந்தாலும், வேதங்கள் அறிந்த அந்தணனாக இருந்தாலும், வாய் பேச இயலாத ஊமையாக உள்ளவர்கள் அல்லாமல் வேறு மனிதர்கள் யாராக இருந்தாலும், எண்ணிக்கை இல்லாமல் உள்ளதான அவனுடைய திருநாமங்களில் ஏதேனும் ஒன்றை, ஒரு வேளையில், ஒரு நாளில் உச்சரித்தாலும் போதுமானது; இவ்விதம் உச்சரித்தல் என்பது பொழுதுபோகாமல் இருக்கும் நேரத்திலோ, தான் அறியாமல் கனவிலோ, ஏதேனும் ஒன்றைப் பரிகாசம் செய்வதற்காகப் பயன்படுத்தியோ, மற்றவர்கள் தன்னைப் புகழவேண்டும் என்பதற்காகவோ செய்தாலும் நன்றே ஆகும். எந்தத் திசையில் வாழ்ந்தாலும், நம்முடைய நாக்கு கொண்டு ஒரு திருநாமத்தை உச்சரித்தாலும், அல்லது வேறு யாரேனும் திருநாமத்தை உச்சரிக்கும்போது நம்முடைய காது கொண்டு அதனைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் நம்முடைய வாழ்வின் இலட்சியம் அந்த நொடியிலேயே பூர்த்தியாகும்; அந்த நொடியிலேயே நமக்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் கிட்டிவிடும். இப்படியாக திருநாமம் என்பதே முக்தி அளிக்கவல்லது என்னும் இக்கருத்தானது ஸ்ரீமத்பாகவதம் முதலானவற்றுக்கு வியாக்யானம் எழுதிய ஸ்ரீதராச்சார்யரும், ஸ்ரீமஹாபாரதம் முதலானவற்றை இயற்றிய வியாஸ மஹரிஷியும் அருளிச்செய்ததே ஆகும் (நான் புதிதாக ஏதும் கூறவில்லை). இதனையே ஸ்ரீமத்பகவத்கீதையிலும் காணலாம். இதனையே வேதங்கள் புகழ்ந்து கூறுகின்றன. ஆகவே மிகவும் மகிழ்வுடனும் ஈடுபாட்டுடனும் திருநாமங்களை உச்சரித்து, பரமானந்தம் பெற்றவர்களாக

ப்ரஹ்மத்துடன் இணைவீர்களாக. திருநாமத்தின் மஹிமை இத்தகையது என்னும் அறிவு இருந்தால் போதுமானது.

ஸர்வேச்வரா! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நாராயணா! பகவானே! நான் இயற்றிய இந்த ஞானப்பான என்பதில் ஏதும் குற்றம் குறைகள் இருந்தாலும், அல்லது உனது திருவருளால் எந்தக் குற்றமும் இல்லை என்றாலும், இதனை நீ உன்னுடைய திருவுள்ளத்தில் மகிழ்வுடன் ஏற்று அங்கீகரிக்கவேண்டும்.

க்ருஷ்ண க்ருஷ்ணா முகுந்த ஜநார்த்தனா
க்ருஷ்ண கோவிந்த நாராயணா ஹரே
அச்யுதானந்த கோவிந்த மாதவா
ஸச்சிதானந்த நாராயணா ஹரே

കൃഷ്ണ കൃഷ്ണാ മുകുന്ദാ ജനാർദനാ
കൃഷ്ണ ഗോവിന്ദ നാരായണാ ഹരേ
അച്യുതാനന്ദ ഗോവിന്ദ മാധവാ
സച്ചിദാനന്ദ നാരായണാ ഹരേ

ஸ்ரீ குருவாயூரப்பன் திருவடிகளே சரணம்
நாராயண நாராயண நாராயண
ஸ்வாமி பூந்தானம் திருவடிகளே சரணம்

ഹരേ കൃഷ്ണാ! ഗുരുവായൂരപ്പാ!

നാരായണാ! നാരായണാ! നാരായണാ!